II BBA.D 18US14632

I-B.Com

# DEPARTMENT OF TAMIL
## SEMESTER - III - NON MAJOR ELECTIVE - I
## BASIC TAMIL

### எழுத்தும் இலக்கியமும் அறிமுகம் - I

Hrs / Week : 2
Credits : 2

Code : 0[illegible]
Max. Marks : 100

நோக்கம் : தமிழ்மொழியின் அடிப்படைகளைக் கற்பித்தல் - தமிழ் எழுதப் படிக்கப் பயிற்றுவித்தல்.

அலகு 1 : எழுத்துக்கள் அறிமுகம்

உயிர் எழுத்துக்கள் - மெய்யெழுத்துக்கள் - உயிர்மெய்யெழுத்துக்கள் - ஆய்த எழுத்து முதல் எழுத்து சார்பெழுத்துக்கள் - எண்ணிக்கை - வடமொழி எழுத்துக்கள் - ஒலிப்பு வேறுபாடு - பயிற்சி

அலகு 2 : சொற்கள் கற்பித்தல் - எழுத்து வேறுபாடு - சொற்கள் - சேர்த்து எழுதுதல் - பிரித்து எழுதுதல் எதிர்ச்சொல் அ முதல் ஔ வரை - சொல் ஆக்கம் பெயர்ச்சொல் - பெயர், வினை, இடை, உரிச்சொற்கள், ஆங்கிலச்சொற்கள், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், வேறுபாடுகள் முதலியன தந்து பயிற்றுவித்தல்.

அலகு 3 : எழுதும் பயிற்சி - தமிழ் எழுத்து வடிவங்களை இனங்காணப் பயிற்றுவித்தல் - வடிவ வேறுபாடுகளை விளக்க அறிந்து எழுதப் பயிற்றுவித்தல் - பால், காலம், தன்மை ஆகியவற்றை இனங்காணப் பயிற்றுவித்தல்.

அலகு [illegible] : [illegible]தொடர் கற்றல் - சிறிய தொடர்கள் அறிமுகம் - பொருள் [illegible]ம் - சிறு தொடர்களின் உறுப்புக்களைக் கற்பித்தல் - எளிய தொ[illegible]களை எழுதப் பயிற்றுவித்தல்.

அலகு 5 : மழலைப் பாடல்கள் அறநெறிக் கதைகள் - பாடல்கள் - கதைகள் கூறி பிழையின்றி எழுதப் பயிற்றுவித்தல்.

# அலகு - 1

(Vowel) உயிர் எழுத்துக்கள்

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ

(Consonant) மெய் எழுத்துக்கள்

க் ங் ச் ஞ் ட் ண் / த் ந் ப்

ம் ய் ர் / ல் வ் ழ் ள் ற் ன்

ஆய்த எழுத்து : ஃ

உயிர்மெய் எழுத்துக்கள்

வல்லினம் : க ச ட த ப ற

இடையினம் : ய ர ல வ ழ ள

மெல்லினம் : ங ஞ ண ந ம ன

# அ, ஆ ஓசை மொழிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + அ | க | கண் | க் + ஆ | கா | கால் |
| ங் + அ | ங | எங்ஙனம் | ங் + ஆ | ஙா | ---- |
| ச் + அ | ச | சக்கரம் | ச் + ஆ | சா | சாலை |
| ஞ் + அ | ஞ | ஞமலி | ஞ் + ஆ | ஞா | ஞாயிறு |
| ட் + அ | ட | படம் | ட் + ஆ | டா | ஆண்டாள் |
| ண் + அ | ண | பணம் | ண் + ஆ | ணா | அண்ணா |
| த் + அ | த | தவளை | த் + ஆ | தா | தாத்தா |
| ந் + அ | ந | நண்டு | ந் + ஆ | நா | நான்கு |
| ப் + அ | ப | பல்லி | ப் + ஆ | பா | பால் |
| ம் + அ | ம | மணி | ம் + ஆ | மா | மான் |
| ய் + அ | ய | வயல் | ய் + ஆ | யா | யானை |
| ர் + அ | ர | அரம் | ர் + ஆ | ரா | ராமன் |
| ல் + அ | ல | லட்டு | ல் + ஆ | லா | பலா |
| வ் + அ | வ | வயல் | வ் + ஆ | வா | வாழை |
| ழ் + அ | ழ | பழம் | ழ் + ஆ | ழா | விழா |
| ள் + அ | ள | பள்ளம் | ள் + ஆ | ளா | காளான் |
| ற் + அ | ற | சிறகு | ற் + ஆ | றா | இறால் |
| ன் + அ | ன | அன்னம் | ன் + ஆ | னா | வினா |

# இ, ஈ ஓசை மொழிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + இ | கி | கிளி | க் + ஈ | கீ | கீரை |
| ங் + இ | ஙி | --- | ங் + ஈ | ஙீ | ----- |
| ச் + இ | சி | சிலை | ச் + ஈ | சீ | சீப்பு |
| ஞ் + இ | ஞி | ஞிமிறு | ஞ் + ஈ | ஞீ | ----- |
| ட் + இ | டி | வண்டி | ட் + ஈ | டீ | திடீர் |
| ண் + இ | ணி | துணி | ண் + ஈ | ணீ | தண்ணீர் |
| த் + இ | தி | திரை | த் + ஈ | தீ | தீ |
| ந் + இ | நி | நிறம் | ந் + ஈ | நீ | நீர் |
| ப் + இ | பி | பிரம்பு | ப் + ஈ | பீ | பீர்க்கு |
| ம் + இ | மி | மிளகு | ம் + ஈ | மீ | மீசை |
| ய் + இ | யி | மயில் | ய் + ஈ | யீ | மதியீனம் |
| ர் + இ | ரி | நரி | ர் + ஈ | ரீ | பாரீர் |
| ல் + இ | லி | எலி | ல் + ஈ | லீ | சொல்லீர் |
| வ் + இ | வி | விலை | வ் + ஈ | வீ | வீரம் |
| ழ் + இ | ழி | வழி | ழ் + ஈ | ழீ | வாழீ |
| ள் + இ | ளி | உளி | ள் + ஈ | ளீ | கேளீர் |
| ற் + இ | றி | நன்றி | ற் + ஈ | றீ | கூறீர் |
| ன் + இ | னி | கனி | ன் + ஈ | னீ | பன்னீர் |

# உ, ஊ ஓசை மொழிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + உ | கு | குடம் | க் + ஊ | கூ | கூண்டு |
| ங் + உ | ஙு | ----- | ங் + ஊ | ஙூ | ----- |
| ச் + உ | சு | சுவர் | ச் + ஊ | சூ | சூரியன் |
| ஞ் + உ | ஞு | ----- | ஞ் + ஊ | ஞூ | ----- |
| ட் + உ | டு | வீடு | ட் + ஊ | டூ | குண்டூசி |
| ண் + உ | ணு | அணு | ண் + ஊ | ணூ | பூணூல் |
| த் + உ | து | துவரை | த் + ஊ | தூ | தூரல் |
| ந் + உ | நு | நுங்கு | ந் + ஊ | நூ | நூல் |
| ப் + உ | பு | புதர் | ப் + ஊ | பூ | பூச்சி |
| ம் + உ | மு | முகம் | ம் + ஊ | மூ | மூக்கு |
| ய் + உ | யு | செய்யுள் | ய் + ஊ | யூ | வெளியூர் |
| ர் + உ | ரு | புருவம் | ர் + ஊ | ரூ | ரூபாய் |
| ல் + உ | லு | சிலுவை | ல் + ஊ | லூ | கல்லூரி |
| வ் + உ | வு | வரவு | வ் + ஊ | வூ | தஞ்சாவூர் |
| ழ் + உ | ழு | கழுகு | ழ் + ஊ | ழூ | பழூர் |
| ள் + உ | ளு | வள்ளுவர் | ள் + ஊ | ளூ | உள்ளூர் |
| ற் + உ | று | மூன்று | ற் + ஊ | றூ | கற்றூண் |
| ன் + உ | னு | அனுமான் | ன் + ஊ | னூ | நன்னூல் |



Good

Good

# எ, ஏ ஓசை மொழிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + எ | கெ | கெண்டை | க் + ஏ | கே | கேள்வி |
| ங் + எ | ஙெ | ----- | ங் + ஏ | ஙே | ----- |
| ச் + எ | செ | சென்னை | ச் + ஏ | சே | சேனை |
| ஞ் + எ | ஞெ | ---- | ஞ் + ஏ | ஞே | ----- |
| ட் + எ | டெ | டெல்லி | ட் + ஏ | டே | கண்டேன் |
| ண் + எ | ணெ | எண்ணெய் | ண் + ஏ | ணே | கண்ணே |
| த் + எ | தெ | தெரு | த் + ஏ | தே | தேர் |
| ந் + எ | நெ | நெய் | ந் + ஏ | நே | நேரு |
| ப் + எ | பெ | பெண் | ப் + ஏ | பே | பேன் |
| ம் + எ | மெ | மெத்தை | ம் + ஏ | மே | மேடை |
| ய் + எ | யெ | மெய்யெழுத்து | ய் + ஏ | யே | இயேசு |
| ர் + எ | ரெ | பாரெங்கும் | ர் + ஏ | ரே | பேரேடு |
| ல் + எ | லெ | நல்லெண்ணம் | ல் + ஏ | லே | நூலேடு |
| வ் + எ | வெ | வெந்நீர் | வ் + ஏ | வே | வேலை |
| ழ் + எ | ழெ | ஏழெட்டு | ழ் + ஏ | ழே | கீழே |
| ள் + எ | ளெ | ----- | ள் + ஏ | ளே | உள்ளே |
| ற் + எ | றெ | சிற்றெறும்பு | ற் + ஏ | றே | கற்றேன் |
| ன் + எ | னெ | என்னென்ன | ன் + ஏ | னே | ஐயனே |

# ஐ, ஒ ஓசை மொழிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + ஐ | கை | கை | க் + ஒ | கொ | கொம்பு |
| ங் + ஐ | ஙை | ----- | ங் + ஒ | ஙொ | ----- |
| ச் + ஐ | சை | தோசை | ச் + ஒ | சொ | சொந்தம் |
| ஞ் + ஐ | ஞை | மஞ்ஞை | ஞ் + ஒ | ஞொ | ----- |
| ட் + ஐ | டை | கடை | ட் + ஒ | டொ | பாட்டொளி |
| ண் + ஐ | ணை | அணை | ண் + ஒ | ணொ | கண்ணொளி |
| த் + ஐ | தை | வித்தை | த் + ஒ | தொ | தொட்டி |
| ந் + ஐ | நை | நையாண்டி | ந் + ஒ | நொ | நொடி |
| ப் + ஐ | பை | பையன் | ப் + ஒ | பொ | பொம்மை |
| ம் + ஐ | மை | இமை | ம் + ஒ | மொ | மொட்டை |
| ய் + ஐ | யை | மாயை | ய் + ஒ | யொ | வாயொலி |
| ர் + ஐ | ரை | கீரை | ர் + ஒ | ரொ | சுவரொட்டி |
| ல் + ஐ | லை | மாலை | ல் + ஒ | லொ | நல்லொழுக்கம் |
| வ் + ஐ | வை | வைகை | வ் + ஒ | வொ | ஒவ்வொரு |
| ழ் + ஐ | ழை | வாழை | ழ் + ஒ | ழொ | ------ |
| ள் + ஐ | ளை | தவளை | ள் + ஒ | ளொ | உள்ளொன்று |
| ற் + ஐ | றை | கறை | ற் + ஒ | றொ | சொற்றொடர் |
| ன் + ஐ | னை | புனை | ன் + ஒ | னொ | வானொலி |

## ஓ, ஔ ஓசை மொழிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + ஓ | கோ | கோழி | க் + ஔ | கௌ | கௌரவம் |
| ங் + ஓ | ஙோ | ------ | ங் + ஔ | ஙௌ | ------ |
| ச் + ஓ | சோ | சோலை | ச் + ஔ | சௌ | சௌரி |
| ஞ் + ஓ | ஞோ | ----- | ஞ் + ஔ | ஞௌ | ------ |
| ட் + ஓ | டோ | டோலாக்கு | ட் + ஔ | டௌ | டௌரி |
| ண் + ஓ | ணோ | விண்ணோர் | ண் + ஔ | ணௌ | ------ |
| த் + ஓ | தோ | தோடு | த் + ஔ | தௌ | ------ |
| ந் + ஓ | நோ | நோய் | ந் + ஔ | நௌ | ------ |
| ப் + ஓ | போ | போர் | ப் + ஔ | பௌ | பௌர்ணமி |
| ம் + ஓ | மோ | மோர் | ம் + ஔ | மௌ | மௌனம் |
| ய் + ஓ | யோ | யோகம் | ய் + ஔ | யௌ | யௌவனம் |
| ர் + ஓ | ரோ | ரோஜா | ர் + ஔ | ரௌ | திரௌபதி |
| ல் + ஓ | லோ | மேலோர் | ல் + ஔ | லௌ | லௌகீகம் |
| வ் + ஓ | வோ | திருவோடு | வ் + ஔ | வௌ | வௌவால் |
| ழ் + ஓ | ழோ | கீழோர் | ழ் + ஔ | ழௌ | ------ |
| ள் + ஓ | ளோ | வெள்ளோடு | ள் + ஔ | ளௌ | ------ |
| ற் + ஓ | றோ | பெற்றோர் | ற் + ஔ | றௌ | ------ |
| ன் + ஓ | னோ | மனோகர் | ன் + ஔ | னௌ | ------ |

## எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | - | 12 |
| மெய் எழுத்துக்கள் | - | 18 |
| சார்பெழுத்துக்கள் | - | 3 |
| **மொத்தம்** | | **33** |

## சார்பெழுத்துக்கள்

(1) குற்றியலிகரம் (Shortened இ)

(2) குற்றியலுகரம் (Shortened உ)

(3) ஆய்தம் (ஃ)

## வடமொழி எழுத்துக்கள்

| ஹ | ஷ | ஜ | ஸ | ஸ்ரீ |
|---|---|---|---|---|
| Ha | Sha | Ja | Sa | Sri |

1. ஹர்ஷா - Harsha
2. ஹம்ஸா - Hamsa
3. ஹாரிஸ் - Haris
4. ஹல்வா - Halwa
5. ரஹ்மான் - ரஹ்மான்
6. ஷாஜஹான் - Shajahan
7. விஷம் - Poison
8. ஜலம் - நீர் (Water)
9. ஜாஸ்தி - அதிகம்
10. ஜெயம் - வெற்றி
11. ஜாஸ்மின் - Jasmin
12. கிஸ்தி - வரி (Tax)
13. ரஸம் - Soup
14. வாஸன் - Vasan
15. ஸ்ரீரங்கம் - Srirangam

# ஒலிப்பு வேறுபாடு

(1) {ர - Soft R ; ற - Hard R}

(2) {ல - Soft *l* ; ள - Middle *l*; ழ - Special *l*}

(3) {ந - starting n; ன - n like ல்; ண - n like ள்}

ஒலிப்பு : ல - from teeth

ள - from roof

ழ - from sides of tongue

---

**(எ.கா)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | மரம் | - tree; | | மறம் | - | வீரம் (valour) |
| 2. | அரம் | - blade; | | அறம் | - | Conduct |
| 3. | பரவை | - கடல் (Sea); | | பறவை | - | Bird |
| 4. | பல்லி | - lizard; | | பள்ளி | - | School |
| 5. | கலை | - art; | | களை | - | Weed |
| 6. | தலை | - head; | | தழை | - | Leaves |
| 7. | தால் | - tongue; | | தாள் | - | Paper |
| | | | | தாழ் | - | Lock |
| 8. | வாளை | - a fish; | | வாழை | - | Banana |
| 9. | மனம் | - mind; | | மணம் | - | Perfume |
| 10. | கனம் | - Weight; | | கணம் | - | Moment |

## அலகு - 2

### ஓர் எழுத்துச் சொற்கள்

ஆ ஈ கோ நீ மா வா தா

வை மை கை பை தை போ

### இரண்டு எழுத்துச் சொற்கள்

ஆடு ஆறு ஆண் ஆடை உளி உறி ஊர்

ஊமை ஊசி எலி ஏணி ஏர் ஏழு ஏரி

ஒலி ஒளி ஓலை ஓடை பசு படி நடி நரி

தடி நட புல் வேலி கண் உன் எண்

பெண் நாடு வீடு பாடு கோடு காடு

மாடு ஏடு எடு கேணி பணி மணி

### மூன்று எழுத்துச் சொற்கள்

அம்மா அப்பா அணில் அம்மி அவல்

அன்பு அரம் ஆவல் இஞ்சி இதழ் இரவு

ஈசன் உரல் உப்பு உடல் ஊதல் ஊர்தி

ஊனம் எட்டு எருது எஃகு ஐந்து ஐவர்

ஐயம் ஒன்று ஓடம் ஓநாய் சங்கு தராசு

நான்கு மரம் வயல் முயல் நன்றி பலன்

## சேர்த்து எழுதுதல் Add In

| | | | |
|---|---|---|---|
| 1 | தமிழ் + இனம் | = | தமிழினம் |
| 2 | பகல் + ஒளி | = | பகலொளி |
| 3. | பெண் + இயம் | = | பெண்ணியம் |
| 4. | சொல் + ஆற்றல் | = | சொல்லாற்றல் |
| 5. | ஊடு + அகம் | = | ஊடகம் Meedio |
| 6. | Nest கூடு + பறவை | = | கூட்டுப்பறவை |
| 7. | வண்ணம் + கிளி Parrot | = | வண்ணக்கிளி |
| 8 | கூண்டு + புலி Cage Tiger | = | கூண்டுப்புலி |
| 9. | கண் + இமை | = | கண்ணிமை |
| 10 | படகு + துறை Boat | = | படகுத்துறை |

## பிரித்து எழுதுதல் Separate

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆட்டுக்கால் | = | ஆடு + கால் |
| 2. | ஓட்டுக்கூரை | = | ஓடு + கூரை |
| 3 | வீட்டுச்சுவர் | = | வீடு + சுவர் |
| 4 | மனையகம் | = | மனை + அகம் |
| 5. | ஆவினம் | = | ஆ + இனம் |
| 6. | கோயில் | = | கோ + இல் |
| 7 | துறைமுகம் | = | துறை + முகம் |
| 8. | பிறைநிலா | = | பிறை + நிலா |
| 9. | தென்னங்கன்று | = | தென்னை + கன்று Sappling |
| 10. | பூனைக்குட்டி | = | பூனை + குட்டி |

## பெயர்ச்சொல்

[ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல் ஆகும். இது பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் என்று ஆறு வகைப்படும்]

### எண்ணுப் பெயர்கள்

**எண் - Number (எண்கள் - Numbers)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | - | ஒன்று | 6 | - | ஆறு |
| 2 | - | இரண்டு | 7 | - | ஏழு |
| 3 | - | மூன்று | 8 | - | எட்டு |
| 4 | - | நான்கு | 9 | - | ஒன்பது |
| 5 | - | ஐந்து | 10 | - | பத்து |
| 20 | - | இருபது | 60 | - | அறுபது |
| 30 | - | முப்பது | 70 | - | எழுபது |
| 40 | - | நாற்பது | 80 | - | எண்பது |
| 50 | - | ஐம்பது | 90 | - | தொன்னூறு |
| 100 | - | நூறு | 600 | - | அறுநூறு |
| 200 | - | இருநூறு | 700 | - | எழுநூறு |
| 300 | - | முந்நூறு | 800 | - | எண்ணூறு |
| 400 | - | நானூறு | 900 | - | தொள்ளாயிரம் |
| 500 | - | ஐநூறு | 1000 | - | ஆயிரம் |

1,00,000 - லட்சம் (Lakh)

1,00,00,00 - கோடி (Crore)

## நாட்பெயர்கள் (day - கிழமை)

ஞாயிறு - Sunday

திங்கள் - Monday

செவ்வாய் - Tuesday

புதன் - Wednesday

வியாழன் - Thursday

வெள்ளி - Friday

சனி - Saturday

## உயிரினங்கள்

### 1. தாவரங்கள் - Flora

### மரம் - Tree (மரங்கள் - Trees)

மாமரம் - Mango tree

பலாமரம் - Jackfruit tree

வாழைமரம் - Banana tree

தென்னைமரம் - Coconut tree

பனைமரம் - Palm tree

ஆலமரம் - Banyan tree

அரசு மரம் - Peepul tree

முருங்கை மரம் - drumstick tree

### செடி - Plant (செடிகள் - Plants)

புல் - Grass

மூங்கில் - Bamboo

நாணல் - Reed

கீரை - Green

கொடி - Creeper

## 2. விலங்கு(கள்) - Animal(s)

### 2.1 வீட்டு விலங்குகள் - (Domestic Animals)

பூனை - Cat

நாய் - Dog

பசு - Cow

எருது - Bullock

எருமை - Buffallo

ஒட்டகம் - Camel

குதிரை - Horse

கழுதை - Donkey

### 2.2 காட்டு விலங்குகள் - (Wild Animals)

சிங்கம் - Lion

புலி - Tiger

நரி - Fox

ஓநாய் - Wolf

சிறுத்தை - Leopard, Panther

யானை - Elephant

கரடி - Bear

மான் - Deer

குரங்கு - Monkey

### 2.3 சிறு விலங்குகள் - (Small Animals)

பாம்பு - Snake

எலி - Rat

உடும்பு - Dragon

பல்லி - Lizard

கீரி - Mongoose

### 2.4 பறவை(கள்) - Bird(s)

| | | |
|---|---|---|
| கோழி | - | Hen |
| சேவல் | - | Cock |
| கிளி | - | Parrot |
| மயில் | - | Peacock |
| காகம் | - | Crow |
| குருவி | - | Sparrow |
| புறா | - | Pegion |

### 2.5 பூச்சி(கள்) - Insect(s)

| | | |
|---|---|---|
| கரப்பான் | - | Cockroach |
| வெட்டுக்கிளி | - | Grasshopper |
| ஈசல் | - | May fly |
| ஈ | - | House Fly |
| வண்டு | - | Bee |
| தேனீ | - | Honey bee |
| குளவி | - | Vasp |
| கொசு | - | Mosquito |

### 2.6 நீர் விலங்குகள் - Water Animals

| | | |
|---|---|---|
| மீன் | - | Fish |
| நண்டு | - | Crab |
| சுறா | - | Shark |
| திமிங்கலம் | - | Whale |
| ஆமை | - | Turtle |
| முதலை | - | Crocodile |
| இறால் | - | Prawn |

## ...டற்பகுதிகள்

| | | |
|---|---|---|
| கண் | - | Eye |
| மூக்கு | - | Nose |
| வாய் | - | Mouth |
| உதடு | - | Lip |
| பல் | - | Tooth |
| தாடை | - | Chin |
| கன்னம் | - | Cheek |
| காது | - | Ear |
| நெற்றி | - | Forehead |
| தலை | - | Head |
| கழுத்து | - | Neck |
| முதுகு | - | Back |
| நெஞ்சு | - | Chest |
| வயிறு | - | Stomach |
| கை | - | Hand |
| விரல் | - | Finger |
| இடுப்பு | - | Waist |
| தொடை | - | Thigh |
| கால் | - | Leg |
| பாதம் | - | Foot |

## வாகனங்கள் - Vehicles

| | | |
|---|---|---|
| கப்பல் | - | Ship |
| பேருந்து | - | Bus |
| மகிழுந்து | - | Car |
| தொடர்வண்டி | - | Train |
| வானூர்தி, விமானம் | - | Aeroplane |
| மிதிவண்டி | - | Cycle |

## நிறங்கள் - Colours

| | | |
|---|---|---|
| வெள்ளை | - | White |
| கறுப்பு | - | Black |
| நீலம் | - | Blue |
| ஊதா | - | Violet |
| பச்சை | - | Green |
| சிகப்பு | - | Red |
| காவி | - | Saffron |
| அரக்கு | - | Brown |
| மஞ்சள் | - | Yellow |

## சுவைகள் - Tastes

| | | |
|---|---|---|
| இனிப்பு | - | Sweet |
| கார்ப்பு | - | Hot |
| கரிப்பு | - | Salty |
| புளிப்பு | - | Sour |
| கசப்பு | - | Bitter |
| துவர்ப்பு | - | Taste of betel nut, raw pomegranate etc. |

## வினைச்சொற்கள்

ஒரு பொருளின் செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

1. கூறுகிறான் - he says
2. எழுகிறான் - he gets up
3. அமர்கிறான் - he sits
4. நடக்கிறான் - he walks
5. ஓடுகிறான் - he runs
6. ஆடுகிறாள் - she dances
7. பாடுகிறாள் - she sings
8. உண்கிறாள் - she eats
9. பருகுகிறாள் - she drinks
10. எழுதுகிறாள் - she writes

## இடைச்சொல்

பெயரையும் வினையையும் இடமாகக் கொண்டு வரும் சொல் இடைச்சொல் ஆகும். இது தனித்து பொருள் தராது. இது ஏழு வகைப்படும். அவை, வேற்றுமை உருபுகள், காலம் காட்டும் இடைநிலைகள், சாரியைகள், உவமை உருபுகள், அசைச் சொற்கள் மற்றும் இசைநிறைச் சொற்கள் ஆகும்.

(எ.கா.) தம்பிக்குப் பரிசு, மன்னனின் ஆணை, அவற்றின், இவற்றின், புலிபோலப் பாய்ந்தான்.

## உரிச்சொல்

செய்யுளுக்கு உரிய சொல் உரிச்சொல் ஆகும். இது இரண்டு வகைப்படும். அவை (1) ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல் (2) பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல்.

## ஆங்கிலச் சொற்கள்

| | | |
|---|---|---|
| Apple | - | ஆப்பிள் |
| Amazon | - | அமேஸான் |
| Rocket | - | ராக்கெட் |
| Bus | - | பஸ் |
| Bulb | - | பல்ப் |
| Cycle | - | சைக்கிள் |
| Chocolate | - | சாக்கலேட் |
| Orange | - | ஆரஞ்சு |
| Pineapple | - | பைனாப்பிள் |
| Plums | - | பிளம்ஸ் |
| Coffee | - | காபி |
| Pencil | - | பென்சில் |
| Geometry | - | ஜியாமெட்ரி |
| Strawberry | - | ஸ்ட்ராபெர்ரி |
| Russia | - | ரஷியா |
| England | - | இங்கிலாந்து |
| Italy | - | இத்தாலி |
| America | - | அமெரிக்கா |
| Arabia | - | அரேபியா |
| Ozone | - | ஓஸோன் |

# திணை, எண், பால், இடம் மற்றும் காலம்

**திணை - 2 (திணை - division; class)**

(i) உயர்திணை ~~Masculine~~, f upper case human

(ii) அஃறிணை lower case non human

**எண் - 2**

(i) ஒருமை - Singular - அவன் வந்தான் Apple

(ii) பன்மை Plural - அவர்கள் வந்தார்கள் Apples

**பால் - 5 (பால் - Gender)**

(i) ஆண்பால் } Masculine — இராமன் வந்தான்

(ii) பெண்பால் } feminine — உயர்திணைக்கு உரியவை — சீதை வந்தாள்

(iii) பலர்பால் } — அவர்கள் வந்தார்கள்

(iv) ஒன்றன்பால் } அஃறிணைக்கு உரியவை — அது வந்தது

(v) பலவின்பால் } — அவைகள் வந்தன

**இடம் - *3* (In English, it is 'person')**

(i) தன்மை I, we

(ii) முன்னிலை you

(iii) படர்க்கை He She It.

**காலம் - *3* (காலம் - Tense)**

(i) இறந்த / கடந்த காலம் Past

(ii) நிகழ்காலம் Present

(iii) எதிர்காலம் / வருங்காலம் future

## (எ.கா) உயர்திணை (Uppercase i.e. human)

### ஆண்பால் / பெண்பால் (masculine / feminine gender)

நான் ஒரு சிறுவன் - I am a boy
நான் ஒரு சிறுமி - I am a girl
தன்மை ஒருமை (1st person singular)

நீ ஒரு ஆண் - You are a male
நீ ஒரு பெண் - You are a female
முன்னிலை ஒருமை (2nd person singular)

அவன் ஒரு சிறுவன் - He is a boy
அவள் ஒரு சிறுமி - She is a girl
படர்க்கை ஒருமை (3rd person singular)

### பலர்பால் (Plural)

நாங்கள் சிறார்கள் - We are children (தன்மை பன்மை)
நீங்கள் மாணவர்கள் - You are students (முன்னிலை பன்மை)
அவர்கள் ஆசிரியர்கள் - They are teachers (படர்க்கை பன்மை)

### அஃறிணை (Lowercase i.e. non-humans)

அது ஒரு பசு - That is a cow
இது ஒரு கன்று - This is a calf
ஒன்றன்பால் (Singular - lower)

அவை பசுக்கள் - They are cows
இவை பழங்கள் - These are fruits
பலவின்பால் (Plural - lower)

## லங்கள் (Tenses)

நான் வந்தேன் - I came (இறந்தகாலத் தன்மை ஒருமை)

நான் வருகிறேன் - I am coming (நிகழ்காலத் தன்மை ஒருமை)

நான் வருவேன்- I will come (எதிர்காலத்தன்மை ஒருமை)

நாங்கள் வருவோம் - We will come (எதிர்காலத் தன்மை பன்மை)

நீ வந்தாய் - You come (இறந்தகால முன்னிலை ஒருமை)

நீ வருகிறாய் - You are coming (நிகழ்கால முன்னிலை ஒருமை)

நீ வருவாய் - You will come(எதிர்கால முன்னிலை ஒருமை)

நீங்கள் வருவீர்கள் - You will come (எதிர்கால முன்னிலை பன்மை)

அவன் வந்தான் - He came (இறந்தகால படர்க்கை ஒருமை - ஆண்பால்)

அவன் வருகிறான் - He is coming (நிகழ்கால படர்க்கை ஒருமை - ஆண்பால்)

அவன் வருவான் - He will come (எதிர்கால படர்க்கை ஒருமை ஆண்பால்)

அவள் வந்தாள் - She came (இறந்தகால படர்க்கை ஒருமை - பெண்பால்)

அவள் வருகிறாள் - She is coming (நிகழ்கால படர்க்கை ஒருமை - பெண்பால்)

அவள் வருவாள் - She will come (எதிர்கால படர்க்கை ஒருமை பெண்பால்)

அவர்கள் வந்தனர் - They came (இறந்தகால படர்க்கை பலர்பால்)

அவர்கள் வருகின்றனர் - They are coming (நிகழ்கால படர்க்கை - பலர்பால்)

அவர்கள் வருவார்கள் - They will come (எதிர்கால படர்க்கை - பலர்பால்)

இது / அது வந்தது - This / That came (இறந்தகால படர்க்கை ஒன்றன்பால்)

இது/அது வருகிறது-This/That is coming(நிகழ்கால படர்க்கை - ஒன்றன்பால்)

இது / அது வரும் - This / That will come (எதிர்கால படர்க்கை - ஒன்றன்பால்)

அவை வந்தன - They came (இறந்தகால படர்க்கை பலவின்பால்)

அவை வருகின்றன -They are coming(நிகழ்கால படர்க்கை - பலவின்பால்)

அவை வரும் - They will come (எதிர்கால படர்க்கை - பலவின்பால்)

## எழுத்து வடிவங்கள் பயிற்சி - 1

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
| 2 | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
| 3 | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
| 4 | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
| 5 | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |

## எழுத்து வடிவங்கள் பயிற்சி - 2

| | க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |
| 2 | க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |
| 3 | க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |
| 4 | க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற | ன் |
| 5 | க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற | ன் |

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல்
வ் ழ் ள் ற் ன்

# எழுத்து வடிவங்கள் பயிற்சி - 3

1) க் + அ = ............
2) த் + ஊ = ............
3) ம் + ஐ = ............
4) ர் + ஈ = ............
5) ட் + ஔ = ............
6) ப் + ஊ = ............
7) ஞ் + ஊ = ............
8) ச் + ஏ = ............
9) ண் + ஓ = ............
10) ழ் + ஆ = ............
11) ற் + இ = ............
12) ள் + உ = ............
13) ன் + எ = ............
14) ய் + ஊ = ............
15) ச் + உ = ............

# எழுத்து பயிற்சி - 4

**பொருத்தமான எழுத்துக்களை நிரப்புக**

1) அ .... ம் என்பது தர்மம் ஆகும்.
2) வானில் இருந்து பெய்வது ம....
3) உயிர்கள் மீது இ....க்கம் காட்ட வேண்டும்.
4) பூ ம....ம் இனிது.
5) அரசன் என்றால் ம.... ....ன்.
6) இ.... = உணவு; இ.... கடவுள்.
7) க.... = ஓரம்; க.... அழுக்கு / தடம்.
8) சிறகுகள் உள்ளது ப....வை.
9) ஆ.... என்பது விலங்கு; ஆ.... என்பது கட்டளை.
10) வி....ப்பம் என்பது ஆசை; ம....ப்பு என்பது தடை.

## எழுத்து பயிற்சி - 5

பால் / காலம் / இடம் கண்டறிந்து நிரப்புக

| வ. எண் | சொற்றொடர் | பால் ஒருமை/பன்மை/ ஒன்றன்/பலவின் | காலம் இற/நிக/எதி | இடம் தன்மை/முன்னிலை படர்க்கை |
|---|---|---|---|---|
| 1) | நான் வருவேன் | | | |
| 2) | அவன் உண்டான் | | | |
| 3) | அவர்கள் வருவார்கள் | | | |
| 4) | அது பறந்தது | | | |
| 5) | நீ வந்தாய் | | | |
| 6) | அவை நீந்துகின்றன | | | |
| 7) | இவன் ஓடுவான் | | | |
| 8) | அவர்கள் கூடினர் | | | |
| 9) | அவை மாயும் | | | |
| 10) | அது கடிக்கின்றது | | | |

## எழுத்து பயிற்சி - 6

| வ. எண் | ஆண்பால் | பெண்பால் | காலம் இற/நிக/எதி | தன்மை/ முன்னிலை/படர்க்கை |
|---|---|---|---|---|
| 1) | நான் வந்தேன் | | | |
| 2) | | அவள் வருவாள் | | |
| 3) | நீ படித்தாய் | | | |
| 4) | | நான் போகிறேன் | | |
| 5) | அவன் ஓடுகிறான் | | | |
| 6) | | அவள் உண்டாள் | | |
| 7) | அவன் விழுவான் | | | |
| 8) | | நான் நடந்தேன் | | |
| 9) | நீ குதிக்கிறாய் | | | |
| 10) | | அவள் தருவாள் | | |

# எழுத்து பயிற்சி - 7

| எண் | ஒருமை | பலர்பால் | காலம் இற/நிக/எதி | தன்மை/ முன்னிலை/படர்க்கை |
|---|---|---|---|---|
| 1) | அவன் தேடினான் | | | |
| 2) | நான் வருவேன் | | | |
| 3) | | அவர்கள் போவார்கள் | | |
| 4) | அவள் கேட்கிறாள் | | | |
| 5) | | அவர்கள் கண்டனர் | | |
| 6) | இவன் பாடுவான் | | | |
| 7) | | இவர்கள் உண்டனர் | | |
| 8) | இவள் எழுதினாள் | | | |
| 9) | இவள் ஓடுகிறாள் | | | |
| 10) | | அவர்கள் எடுப்பார்கள் | | |

# எழுத்து பயிற்சி - 8

| வ. எண் | வா.1 | மாற்றுக | வா. 2 |
|---|---|---|---|
| 1) | நீ பார்க்கிறாய் | பலர்பால் படர்க்கை | |
| 2) | அவள் கேட்டாள் | ஒன்றன்பால் | |
| 3) | இவர்கள் வருவார்கள் | ஆண்பால் முன்னிலை | |
| 4) | அது போனது | பெண்பால் தன்மை | |
| 5) | நாம் கண்டோம் | பலர்பால் படர்க்கை | |
| 6) | அவை பறந்தன | ஒன்றன்பால் | |
| 7) | அது நடக்கிறது | பலவின்பால் | |
| 8) | இது ஓடும் | பலர்பால் முன்னிலை | |
| 9) | நான் படித்தேன் | ஒன்றன்பால் | |
| 10) | அவள் உண்டாள் | ஆண்பால் முன்னிலை | |
| | | பலர்பால் தன்மை | |
| | | பலவின்பால் | |

## அலகு - 4

### சிறிய தொடர்கள் (Small Sentences)

(அ) தமிழ்த் தொடர்களும் ஆங்கிலத்தில் அவற்றின் பொருளும்

(1) தமிழ் ஓர் இனிய மொழி (Tamil is a sweet language)

(2) திருச்சிராப்பள்ளி ஒரு பெருநகரம் (Trichy is a big city)

(3) ரோஜா ஓர் அழகிய மலர் (Rose is a beautiful flower)

(4) புலி ஒரு வலிய மிருகம் (Tiger is a strong animal)

(5) என் வீடு அருகில் உள்ளது (My house is near)

(6) குழல் ஓர் இசைக்கருவி (Flute is a musical instrument)

(7) கதிரவன் கிழக்கில் உதிக்கும் (Sun rises in the east)

(8) என் தந்தை மிகவும் நல்லவர் (My father is a very goodman)

(9) வானம் நீல நிறம் (Sky is blue)

(10) தாமரை நம் தேசிய மலர் (Lotus is our national flower)

#### பயிற்சி 1

தமிழ்த் தொடர்களின் பொருள் விளக்கத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

| வ.எண். | தமிழ்த் தொடர் | பொருள் |
|---|---|---|
| 1. | இந்தியா மிகப் பெரிய நாடு | |
| 2. | மயில் நம் தேசியப் பறவை | |
| 3. | மான் வேகமாக ஓடும் | |
| 4. | என் வீட்டில் மூன்று அறைகள் உள்ளன | |
| 5. | நாற்காலிக்கு நான்கு கால்கள் | |
| 6. | என்னிடம் ஒரு கணினி உள்ளது. | |
| 7. | திருக்குறள் ஒரு நீதி இலக்கியம் | |
| 8. | பிலால் பள்ளிக்குப் போனான் | |
| 9. | கொல்லிமலை மிக உயரமானது | |
| 10. | கனிகள் உணவும் மருந்தும் ஆகும் | |

(ஆ) ஆங்கிலத் தொடர்களும் அவற்றின் தமிழாக்கமும்

(1) Sun sets in the west - கதிரவன் மேற்கில் மறையும்.

(2) Bala went to shop - பாலா கடைக்குப் போனான்.

(3) This dish is tasty - இந்த உணவு சுவையானது.

(4) Bird has two legs - பறவைக்கு இரண்டு கால்கள்.

(5) Fish swims in water - மீன் நீரில் நீந்தும்.

(6) Swan is white - அன்னம் வெண்ணிறம்.

(7) Moon revolves around the earth - நிலா பூமியைச் சுற்றுகிறது.

(8) the fields are green - வயல்கள் பசுமையாய் உள்ளன.

(9) Parrot's beak is red - கிளியின் அலகு சிவப்பு.

(10) There is enough time - போதுமான நேரம் உள்ளது.

## பயிற்சி 2

ஆங்கிலத் தொடர்களின் பொருளைத் தமிழில் எழுதுக.

| வ.எண். | ஆங்கிலத் தொடர் | தமிழாக்கம் |
|---|---|---|
| 1. | Saleem is writing homework | [illegible] |
| 2. | Man has two eyes | [illegible] |
| 3. | Cock has a charming tail | [illegible] |
| 4. | Elephant is a huge animal | [illegible] |
| 5. | Knife is very sharp | [illegible] |
| 6. | Buy blue ink for pen | [illegible] |
| 7. | Gardening is a good hobby | [illegible] |
| 8. | Don't waste water | |
| 9. | Nature is God's creation | |
| 10. | Sahara is a vast desert | |

## சிறு தொடர்களின் உறுப்புக்கள்

1. எழுவாய் - இது பெயர்நிலை ஆகும் (Position of Noun)

2. பயனிலை - இது எழுவாயைத் தொடர்ந்து வரும்.

(எ.கா)

| | எழுவாய் | பயனிலை |
|---|---|---|
| (அ) | சேவல் | கூவியது |
| (ஆ) | பொழுது | புலர்ந்தது |
| (இ) | யுவன் | எழுந்தான் |
| (ஈ) | பூனை | ஓடியது |
| (உ) | பால் | நல்லது |

எழுவாய், பயனிலை ஆகியவை பகுபதமாக அமைந்து பின்வரும் உறுப்புக்களைப் பெறலாம்.

| பகுதி | சந்தி | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|

1. பகுதி - பகுபதத்தில் முதலில் நிற்கும் உறுப்பு
2. சந்தி - பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் நிற்கும் உறுப்பு
3. இடைநிலை - பகுபதத்தில் நடுவில் நிற்கும் உறுப்பு
4. சாரியை - இடைநிலைக்கும் விகுதிக்கும் நடுவில் நிற்கும் உறுப்பு
5. விகுதி - பகுபதத்தில் இறுதியில் நிற்கும் உறுப்பு

**(எ.கா) : நடந்தனன் : நட + த்(ந்) + த் + அன் + அன்**

நட - பகுதி

த்(ந்) - சந்தி

த் - இறந்தகால இடைநிலை

அன் - சாரியை

அன் - விகுதி

(ஆ) ஆங்கிலத் தொடர்களும் அவற்றின் தமிழாக்கமும்

(1) Sun sets in the west - கதிரவன் மேற்கில் மறையும் .

(2) Bala went to shop - பாலா கடைக்குப் போனான்.

(3) This dish is tasty - இந்த உணவு சுவையானது.

(4) Bird has two legs - பறவைக்கு இரண்டு கால்கள்.

(5) Fish swims in water - மீன் நீரில் நீந்தும்.

(6) Swan is white - அன்னம் வெண்ணிறம்.

(7) Moon revolves around the earth - நிலா பூமியைச் சுற்றுகிறது.

(8) the fields are green - வயல்கள் பசுமையாய் உள்ளன.

(9) Parrot's beak is red - கிளியின் அலகு சிவப்பு.

(10) There is enough time - போதுமான நேரம் உள்ளது.

பயிற்சி 2

ஆங்கிலத் தொடர்களின் பொருளைத் தமிழில் எழுதுக.

| வ.எண் | ஆங்கிலத் தொடர் | தமிழாக்கம் |
|---|---|---|
| 1. | Saleem is writing homework | |
| 2. | Man has two eyes | |
| 3. | Cock has a charming tail | |
| 4. | Elephant is a huge animal | |
| 5. | Knife is very sharp | |
| 6. | Buy blue ink for pen | |
| 7. | Gardening is a good hobby | |
| 8. | Don't waste water | |
| 9. | Nature is God's creation | |
| 10. | Sahara is a vast desert | |

## அலகு - 5

## (அ) பாடல்கள்

### 1. ஆத்திசூடி

அறம் செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழ்ச்சி
ஐயம் இட்டு உண்
ஒப்புரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்
அஃகம் சுருக்கேல்

### 2. பசுவும் கன்றும்

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - அங்கு
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு - உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி

### 3. வானத்திலே திருவிழா

வானத்திலே திருவிழா
வழக்கமான ஒருவிழா
இடி இடிக்கும் மேகங்கள்
இறங்கி வரும் தாளங்கள்
மின்னல் ஒரு நாட்டியம்
மேடை வான மண்டபம்
தூரம் ஒரு தோரணம்
தூய மழை காரணம்

## (ஆ) அறநெறிக் கதைகள்

### 1. முயலும் ஆமையும்

ஒருநாள் முயலுக்கும் ஆமைக்கும் ஓட்டப்பந்தயம் நடந்தது. முயல் வேகமாக ஓடியது. ஆமை மிகவும் மெதுவாக ஓடியது. பாதி தூரம் ஓடி முயல் நின்றது. ஆமை மிகவும் பின்னால் வருவதைக் கண்டது. "நாம் மிகவும் வேகமாக ஓடுகிறோம். அதனால் ஓய்வு எடுத்துச் செல்லலாம்" என்று எண்ணியது. அங்கேயே படுத்து உறங்கியது. ஆமை முயற்சியுடன் தொடர்ந்து ஓடியது. முயல் வெகு நேரம் தூங்கி விட்டது. அது கண் விழித்துப் பார்த்தபோது ஆமை இலக்கை அடைந்து விட்டது. ஆமை வெற்றி பெற்றது. முயல் தோற்றது. பிறரைக் குறைவாக நினைப்பதும் தன்னைப் பெரிதாக நினைப்பதும் தோல்வியைத் தரும்.

நீதி : தற்பெருமை தாழ்ச்சி தரும்

### 2. நாயும் எலும்பும்

ஒரு நாய் எலும்புத்துண்டு ஒன்றைக் கண்டது. அதை வாயில் கௌவிக் கொண்டு ஓடியது. ஊருக்கு வெளியே ஒரு குளத்தின் அருகில் வந்து நின்றது. குளத்தின் நீரில் அதன் பிம்பத்தைக் கண்டது. வேறு ஒரு நாய் வாயில் எலும்புடன் நிற்பதாக நினைத்தது. அந்த நாயிடம் உள்ள எலும்பும் தனக்கு வேண்டும் என்றுயு நினைத்தது. அதனால் அந்த நாயைப் பார்த்துக் குரைத்தது. அதன் வாயில் இருந்த எலும்பு குளத்திற்குள் விழுந்து விட்டது.

நீதி : பேராசை பட்டால் உள்ளதும் பறிபோகும்.

## 3. நரியும் திராட்சையும்

ஒரு நரி மிகவும் பசியுடன் இருந்தது. அது உணவு தேடி அலைந்தது. அதற்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. அது ஒரு கிராமத்தின் பக்கம் சென்றது. ஒரு திராட்சைத் தோட்டத்தைக் கண்டது. திராட்சைக் குலைகளைப பார்த்து நரி மிகவும் மகிழ்ந்தது. திராட்சைக் குலைகள் உயரத்தில் இருந்தன. நரி தவ்வி தவ்விப் பார்த்தது. திராட்சைக் குலைகள் அதற்கு எட்டவில்லை. "சீ! சீ! இந்தப் பழம் புளிக்கும்" என்று சொல்லிக் கொண்டே ஓடிவிட்டது.

நீதி : கிட்டாத பொருளைக் கீழோர் பழிப்பர்.

## 4. மாடுகளும் சிங்கமும்

புல்வெளியில் நான்கு மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. காட்டில் இருந்து வந்த சிங்கம் ஒன்று அவற்றைக் கண்டது. அவற்றைக் கொன்று தின்ன ஆசை கொண்டது. மாடுகள் நான்கும் ஒன்று சேர்ந்து சிங்கத்தை முட்ட வந்தன. சிங்கம் பயந்து ஓடிவிட்டது. பின்னர் ஒரு நாள் நான்கு மாடுகளும் தமக்குள் பகை கொண்டு பிரிந்து விட்டன. அவை தனித்தனியே மேய்ந்தன. இதனைக் கண்ட சிங்கம் அவற்றை ஒவ்வொன்றாகக் கொன்று விட்டது.

நீதி : ஒற்றுமையே வலிமை